# DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 51/17 |
| Deposition of witness for | Prosecution wit. PW.4 |
| Name | கனகவல்லி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 13-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் அம்பாசமுத்திரத்தில் மோட்டார் ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலகம் திருச்செந்தூரில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியில் இருந்த போது கடந்த 24.05.2016 ம் தேதியன்று செய்துங்கநல்லூர் காவல் ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க TN 72 BC 2224 என்ற இருசக்கர வாகனத்தை அலுவலத்தில் வைத்து விபத்தாய்வு செய்தில் வாகனத்தில் கீழ்கண்ட சேதாரம் ஏற்பட்டது, முன்புற வீல் மக்காடு சேதாரம் ஆகி காணப்பட்டது. என்ஜின் கவர் சேதாரமாகி காணப்பட்டது. சைலன்ஸர் கவர் வலைந்து காணப்பட்டது. கேண்டில் பார்

வளைந்து காணப்பட்டது. கிராஸ்பார் வளைந்து காணப்பட்டது. ெஹட்லைட் அசெம்பிளி செட் வளைந்து காணப்பட்டது. முன்புற இடது லிவர் மௌண்டிங் உடைந்து காணப்பட்டது. முன்புற இடது fork வளைந்து காணப்பட்டது. Select gear வளைந்து காணப்பட்டது, foot rest சேதாரமாகி காணப்பட்டது. வாகனத்தை இயக்க முடியாத நிலையில் இருந்ததால் வாகனம் நின்ற நிலையில் ஆய்வு செய்யப்பட்டது. வாகனத்தின் கால்தடைதிறன் இணைப்புகள் நல்ல நிலையில் இருந்தது. வாகனமானது எவ்வித இயந்திர கோளாறுனாலும் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் சான்று **அ.சா.ஆ.2** ஆகும். மேலும் அதே வழக்கில் தொடர்புடைய மற்றொரு வாகனம் TN 72 AC 1274 என்ற இலகு ரக வாகனத்தை கடந்த 24.05.2016 ம் தேதியன்று அலுவலகத்தில் வைத்து விபத்தாய்வு செய்ததில் கீழ்கண்ட சேதாரம் காணப்பட்டது. முன்புற வலது பம்பர் சேதாரமாகியும், முன்புற வலது ஆர்னர் பாடி பெண்டன் சேதாரமாகி காணப்பட்டது. வாகனத்தில் கால்தடை மற்றும் கைத்தடை திறன் நல்ல நிலையில் இருந்தது. வாகனமானது எவ்வித இயந்திர கோளாறுனாலும் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய சான்று **அ.சா.ஆ.3** ஆகும். காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>.

இருசக்கர வாகனம் ஓட்டிவந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தேதியான 15.05.2016 ம் தேதியிலிருந்து ஒருவாரம் கழித்து தான் ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். ஒருவாரம் காலத்தில் வாகனத்தின் இயந்திரக் கோளாறினை சரிசெய்ய வாய்ப்புள்ளது

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.